# மே - 30 - செவ்வாய்

## புனித யோன் ஒப் ஆர்க்

## “என் தலைவர் செய்தி அறிவித்தார்“- திபா 68 : 10

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 20 : 17 – 27

அக்காலத்தில் பவுல் மிலேத்துவிலிருந்து எபேசுக்கு ஆளனுப்பி, திருச்சபையின் மூப்பர்களை வரவழைத்தார். அவர்கள் வந்ததும் அவர்களிடம் அவர் கூறியது: ”நான் ஆசியாவுக்கு வந்து சேர்ந்த நாள்முதல் இந்நாள்வரை எவ்வாறு உங்களிடம் நடந்து கொண்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். யூதர்களுடைய சூழ்ச்சிகளால் எனக்கு ஏற்பட்ட சோதனைகளின்போது மிகுந்த மனத்தாழ்மையோடும் கண்ணீரோடும் ஆண்டவருக்குப் பணி புரிந்தேன். நன்மை பயக்குமொன்றையும் உங்களுக்கு நான் அறிவிக்காமல் விட்டு விடவில்லை பொது இடங்களிலும் வீடுவீடாகவும் சென்று உங்களுக்குக் கற்றுக் கொடுத்தேன். நம் ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ளுமாறும், மனம்மாறி கடவுளிடம் வந்து சேருமாறும் நான் யூதரிடமும் கிரேக்கரிடமும் வற்புறுத்திக் கூறினேன். இப்போதும் தூய ஆவியாருக்குக் கட்டுப்பட்டு நான் எருசலேமுக்குச் செல்லுகிறேன். அங்கு எனக்கு என்ன நேரிடுமென்பது தெரியாது. சிறை வாழ்வும், இன்னல்களும் எனக்காகக் காத்திருக்கின்றன என்று தூய ஆவியார் ஒவ்வொரு நகரிலும் என்னை எச்சரித்து வருகிறார். என்னைப் பொறுத்த வரையில் எனது உயிரை ஒரு பொருட்டாக நான் மதிக்கவில்லை. இறையருளைப் பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றி என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பதே என் விருப்பம். இதுவரை நான் உங்களிடையே வந்து இறையாட்சியைப் பற்றி பறைசாற்றினேன். ஆனால் இனிமேல் உங்களுள் எவரும் என் முகத்தைப் பார்க்கப் போவதில்லை என்று நான் அறிவேன். உங்களுள் எவரது அழிவுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்று இன்று நான் உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுளின் திட்டம் எதையும் நான் உங்களுக்கு அறிவிக்காமல் விட்டுவிடவில்லை.

**பதில்பாடல் :** உலகிலுள்ள அரசர்களே கடவுளைப் புகழ்ந்தேத்துங்கள்

### நற்செய்தி : யோவான் 17 : 1 – 11

அக்காலத்தில் இயேசு சீடர்களோடு பேசியபின் இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து வேண்டியது: ”தந்தையே, நேரம் வந்துவிட்டது. உம்மகன் உம்மை மாட்சிப்படுத்துமாறு நீர் மகனை மாட்சிப்படுத்தும். ஏனெனில், நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை அருளுமாறு மனிதர் அனைவர்மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர். உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு.. நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன். தந்தையே, உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப்படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்குத் தந்தருளும். நீர் இவ்வுலகிலிருந்து தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தினேன். உமக்கு உரியவர்களாய் இருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உம் வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள். நீர் எனக்குத் தந்தவை அனைத்தும் உம்மிடமிருந்தே வந்தவை என்பது இப்போது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் நீர் என்னிடம் சொன்ன வற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதை உண்மையில் அறிந்துகொண்டார்கள். நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள். அவர்களுக்காக நான் வேண்டுகிறேன். உலகிற்காக அல்ல, மாறாக நீர் என்னிடம் ஒப்படைத்தவர் களுக்காகவே வேண்டுகிறேன். அவர்கள் உமக்கு உரியவர்கள். ”என்னுடையதெல்லாம் உம்முடையதே் உம்முடையதும் என்னுடையதே. அவர்கள் வழியாய் நான் மாட்சி பெற்றிருக்கிறேன். இனி நான் உலகில் இருக்கப்போவதில்லை. அவர்கள் உலகில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன். தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்“ என்றார்.

**தியானம் :** இன்றைய நற்செய்தியில் தமது பரலோக தகப்பனை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே இயேசுவின் முக்கிய குறிக்கோளாகவிருந்தது என்பது தெளிவாக எமக்கு சுட்டிக்காட்டப்படுகின்றது. அதே வேளையில் எமது இவ்வுலகத் தகப்பன் மட்டில் நாம் எவ்வாறு அக்கறையோடும் கரிசனையோடும் இருக்கின்றோம் என்பதனையும் வேறுவிதமாக ஆராயவும் இன்றைய நற்செய்தி எமக்கு அழைப்பு விடுக்கின்றது. இன்றைய நற்செய்தி ஆண்டவர் இயேசு தமது பரலோக தகப்பனை நோக்கி விண்ணப்பம் செய்கின்ற ஒரு செபமாகவும் எமக்குத் தென்படலாம். “நான் அவர்களோடு இருந்தபோது நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்து வந்தேன். நன்கு பாதுகாத்தேன். அவர்களுள் எவரும் அழிவுறவில்லை“ (யோவான் 17:12) என்கின்ற வார்த்தைகள் நாமனைவரும் நிலைவாழ்வைப் பெறுவதன் வழியாக இறைவனை மாட்சிப்படுத்துவது மட்டுமல்ல நாம் பாதுகாப்புடனும் வாழவேண்டும் என்பதே இயேசுவின் விருப்பமாக இருந்ததாக நாம் பொருள் கொள்ளலாம். நம்மில் யாரையும் இழப்பதற்கோ அல்லது அழிந்து போவதையோ் இயேசு விரும்பவில்லை (யோவான் 17:15). இதனையே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது 18-03-2014 திகதிய ருவிட்டர் செய்தியில் “நாம் ஆண்டவரிடம் நெருங்கி வரவேண்டுமென்று அவர் விரும்பகிறார். நம்மை மன்னிப்பதற்கு நமக்காகக் காத்திருக்கிறார் என்பதை அவர் உறுதிசெய்கிறார்“ என்கின்றார். இயேசு கற்றுத்தந்தவாறு நாம் எமது பரலோக தகப்பனை “அப்பா தந்தாய்“ என உரிமையோடு அழைப்பது மட்டுமல்ல எம்மையும் அவரோடு உறவுகொள்ள அழைத்துள்ளார் என்பதனை விசுவசித்து ஏற்றுக்கொள்வோம். அதேவேளையில், எமது இவ்வுலகத் தகப்பனோடு நாம் எவ்வகையான உறவுத்தன்மையில் வாழுகின்றோம் என ஆராய்வோம். வயதான காலத்தில் அவர்களை அக்கறையோடு கவணித்துப் பராமரித்து அன்பு செலுத்துகின்றோமா? அல்லது ஏனோ தானோ என்ற அசமந்த நிலையா? ஏனெனில் இயேசு போன்று நாமும் எமது இவ்வுலகத் தகப்பன்மாரிலும் நல்லுறவு வைத்திருப்பது மட்டுமல்ல அவர்களது நல்வாழ்விற்காகவும் செபிக்க அழைக்கப்பட்டுள்ளோம்.